1983 பிப்ரவரி 8]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, 80–81 ஆம் ஆண்டு, 19.72 லட்ச ரூபாய் செலவில் புதுக்கோட்டை மற்றும் உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் 40 கலப்பினக் கன்றுகளை வாங்கி வளர்த்து அது நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த மாவட்டத்திலுள்ள ஏழை விவசாயிகளுக்கு லாப நஷ்டம் இல்லாத அளவில் இந்தத் திட்டத்தின் வாயிலாக 28 மாதங்கள் கால்நடைப் பண்ணைகளில் வளர்த்து அவர்களுக்கு விநியோகம் செய்து கொண்டு வருகிறோம்.

கால்நடை கூட்டுறவுச் சங்கங்களில் தொற்றுநோய் தடுப்புப் பணிகளைக் கவனிக்க செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள்.

வினா எண். 191. திரு. செ. செம்மலை : மற்றும் திரு. மா. சின்னராசு : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடை கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது தொற்று நோய்த் தடுப்புப் பணிகளை கவனிக்க செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் என்ன?

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள 587 ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்களில் ஒரு சங்கத்திற்கு ஒரு ஆய்வாளர் வீதம் 5 சங்கங்களுக்கு மட்டும் ஆய்வாளர்கள் பணியாற்றி, அங்கத்தினர்களின் ஆடுகளுக்கு தொற்றுநோய் தடுப்புப் பணிகளை கவனித்து வருகிறார்கள். 39 சங்கங்களில் மூன்று சங்கங்களுக்கு ஒரு கால்நடை உதவி மருத்துவர் என்ற வீதம் நியமிக்கப்பட்டு தொற்று நோய் தடுப்புப் பணிகளை கவனித்து வருகிறார். இச்சங்கங்கள் வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவி பெற்றவை. இதர கால்நடை வளர்ப்புச் சங்கங்களில் உள்ள எல்லா ஆடுகளுக்கும், பொதுவாக எல்லா ஆடுகளுக்கும், பொதுவாக எல்லா கூட்டுறவு சங்கங்களில் வளர்க்கப்படும் மாடுகளுக்கும், அவற்றின் அருகாமையிலுள்ள கால்நடை மருந்தகங்கள் மூலம் தொற்று நோய் தடுப்புப் பணிகளை கவனிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொற்று நோயால் திடீரென்று பாதிக்கப்பட்டு கால்நடைகள் இறந்துவிடுவதால், கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன்பெற்று, கால்நடைகளை வாங்கிய கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு பெரிதும் இழப்பு ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, இந்த நிலையைப் போக்க அனைத்து ஒன்றியங்களிலும் நடமாடும் மருத்துவமனை ஏற்படுத்த அரசு பரிசிலிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாவட்டந்தோறும் நடமாடும் கால்நடை மருத்துவ மனைகள் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாக நல்ல முறையில் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. ஒன்றியங்கள் மூலமாக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் நடமாடும் கால்நடை மருத்துவ மனை அமைக்கப்பட வேண்டுமானால் மிகவும் நிதி செலவாகும். ஆகவே, நிதிவசதியை கருத்தில் கொண்டு அதற்கேற்றவாறு தான் இவைகளைச் செயல்படுத்த முடியும். அதனால்தான் மாவட்டம் தோறும் அமைக்கப்படும் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் சென்று, அந்த ஒன்றியங்களில் உள்ள கால்நடைகளுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளித்து வருகிறது.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே' குடும்ப நலத் திட்டங்களுக்கு கிராமந்தோறும் பயிற்சி முகாம் நடத்துவது போல், இதுபோன்ற நோய்த் தடுப்பு முறை பற்றியும் விரிவாக சங்க உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு கிராமங்கள்தோறும் பயிற்சி முகாம் நடத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே' மருத்துவர்கள் இப்போது கிராமங்கள் தோறும் ஏழை எளிய விவசாயிகளுக்கு ஆங்காங்கே சென்று பயிற்சி கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் பயனாக, சி. ஐ. டி. பி. திட்டங்கள் செயலாகும் மாவட்டங்களில் மட்டும் தான் கூட்டுறவு சங்கங்களுக்கு இதுபோன்ற லைவ் ஸ்டாக் இன்ஸ் பெக்டர்கள் தனி அலுவலர்களாக போடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. மற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கத்தின் உதவி கிடைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே மற்ற சங்கங்களின் நலனைக் கருத்தில் கொண்டு, எல்லாச் சங்கங்களுக்கும் இதுபோன்ற உதவியாளர் களை செயலாளர்களாக நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் 587 கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. அதிலே, வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 39 ஆடு வளர்ப்புச் சங்கங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. சிறப்புக் கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் 229 ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. வறட்சி நிவாரணப் பணித்திட்டத்தின் மூலம் 125 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச்சங்கங்கள் இயங்கிக் கொண்டுஇருக்கின்றன. மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டத்தின்மூலம் 4 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன. பழங்குடி மக்கள் முன்னேற்றத் திட்டம் மூலம் 3 ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இதர சங்கங்கள் 186 கூட்டுற

சங்கங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. எல்லா இடங்களிலும் அதற்கான கால்நடை ஆய்வாளர்கள் அமைத்து அவர்கள் செயலாளர்களாக இலவசக்குப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க வேண்டுமானால் நாட்டுமையாக்கப்பட்ட பாங்குகளில் ஒபினியன் வேண்டியிருக்கிறது. அவர்கள் ஒபினியன் கொடுத்தால்தான் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்க முடிகிறது. ஆனால் இராமநாதபுரம் மாவட்டம் பாண்டியன் கிராம பாங்கு ஒபினியன் கொடுக்க மறுப்பதால் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்புதிதாக ஆரம்பிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள், இதைப் போக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகளை அரசு நிச்சயமாக கவனிக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, சில மாடுகளுக்குப் போடுகின்ற சில தடுப்பு ஊசிகளுக்கு பணம் வசூலிக்கப்படுகிறது. அவைகளுக்கும் ஒன்றியங்கள் மூலமாக அரசே மானியம் கொடுத்து தற்போதுள்ள வறட்சி நிலையை கருத்தில் கொண்டு அந்த தடுப்பு ஊசிகளை பணம் வாங்காமல் இனாமாகப் போடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, உயர்ரக தடுப்பு ஊசிகள் போடுவதற்கு, ஏழை விவசாயிகள் குறுநில விவசாயிகள் ஆகியோரிடமிருந்து கட்டணம் வசூலிக்காமல் இலவசமாகப் போடப்படுகிறது. வசதி படைத்தவர்களாக இருந்தால் அவர்கள் பணம் கொடுத்துத்தான் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.

ஊராட்சித் தேர்தலுக்கு முன் ஊராட்சி ஒன்றியங்களை மாற்றியமைக்கும் திட்டம்.

* குறுகிய கால வினா எண். 3 திரு. என். பழனிவேல் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரும் ஊராட்சித் தேர்தலுக்கு முன், ஊராட்சி ஒன்றியங்களை மாற்றியமைத்து சீர் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், பழனி ஒன்றியத்திலிருந்து ஆண்டிப்